DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 118 of 2021 |
| Deposition of witness for | : | PW10 |
| Name | : | லட்சுமணதாஸ் |
| Father's Name | : | சேவி கவுண்டர் |
| Village | : | மோகனூர் |
| Taluk | : | நாமக்கல் |
| District | : | நாமக்கல் |
| Profession | : | ஆய்வாளர் |
| Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 19th day of September 2025.

எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், மோகனூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் ஒசூர் நகர காவல் நிலையத்தில் நான் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது அவர் என்னிடம் ஓட்டுநராக பணிபுரிந்தார். கடந்த 28.01.2020 ஆம் தேதியன்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது, எனது அரசு காவல் நிலைய காவலர் வாகனத்தில் ஓட்டுநராக பணிபுரிந்த பாரதிமோகன் மற்றும் சுந்தர் இருவரும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் பணிபுரிவார்கள். அதன் படி 26.01.2020 ஆம் தேதியன்று மாற்று ஓட்டுநர் காவலர் 1668 சுந்தர் என்பவர் ஓய்வில் சென்றார். 27.01.2020 ஆம் தேதியன்று எதிரி பாரதிமோகன் பணிக்கு வர வேண்டியவர் பணிக்கு வரவில்லை. நிலைய எழுத்தர் முதல்நிலை காவலர் திரு.கணேசன், 618 கைப்பேசி மூலம் தொடர்பு கொண்ட போது அவர் போன் எடுக்கவில்லை. பின் 28.01.2020 ஆம் தேதியன்று 16.00 மணிக்கு தான் பணிக்கு வந்தார். அன்று இரவு பணி முடித்து 29.01.2020 ஆம் தேதி ஓய்வில் சென்றார். மீண்டும் 30.01.2020 ஆம் தேதி ஓட்டுநர் பணியில் இருந்தார். 27.01.2020

ஆம் தேதியன்று நிலைய பொது நாட்குறிப்பில் நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் சரவணன் என்பவர் நிலைய பொது நாட்குறிப்பிலும், Duty Roster லும் பாரதிமோகன் பணிக்கு வரவில்லை என குறிப்பிட்டுள்ளார். அப்போது அன்றைய தேதியில் 28.01.2020 ஆம் தேதியன்று absent மார்க் செய்துள்ள பொது நாட்குறிப்பு மற்றும் Duty Roster இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இவ்வழக்கு சம்பந்தமாக அப்போதைய அஞ்செட்டி காவல் ஆய்வாளர் திரு.ரவிக்குமார் என்பவர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

அஞ்செட்டி காவல் ஆய்வாளர் திரு.ரவிக்குமார் என்பவரிடம் என்னிடம் பாரதிமோகன் என்பவர் ஓட்டுநராக பணிபுரிந்தார் என்ற விவரத்தையும், சம்பவ நாளன்று absent (ஓய்வு) இல் இருந்தது பற்றியும் தெரிவித்தேன். இரண்டு நபர்கள் வழிப்பறி செய்தது சம்பந்தமாக விசாரணை செய்வதாக சொன்னார். ஒரு நபர் காவல் நிலையத்தில் பணிபுரிந்தார். மற்றொரு நபர் Friends of Police என்ற முறையில் பணியில் இருந்தார். பாரதிமோகன் ஓய்வில் இருந்தாரா பணிக்கு வந்தாரா என்று குறிப்பிடும் பொது நாட்குறிப்பு மற்றும் Duty Roaster ஆவணத்தை அஞ்செட்டி காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளேன். அவ்வாறு குறிப்பிடவில்லை என்றாலும், அதனால் தான் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அதற்கான நகல் வழக்கு கோப்பில் உள்ளது. எனக்கு கீழ் ஓட்டுநராக பணிபுரிந்ததால் அவர் எனக்கு அடிபணிந்து நடக்க வேண்டி அவரின் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் அவரின் நண்பர் கார்த்திகேயன் என்பவரையும் சேர்த்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உங்கள் மேல் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதன் பெயரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.